# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 6th Term Examination - 2021

FWC


| | | |
|---|---|---|
| இலங்கை வரலாறு I | Three Hours ten min | 25 T I |
| Sri Lankan History I | Gr -13 (2021) | |

**கவனிக்க.**

- எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை அளிக்குக..
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

## பகுதி – I

❖ இல 1 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 1. அனுராதபுரம் 2. உபதிஸ்ஸகாம 3. உருவெலகாம 4. புங்ககாம 5. விஜிதகாம ( )

2) 1. மணிமேகலை 2. ஆர்பாக்கம் 3. திருவலங்காடு 4. பல்லவராஜன்பேட்டை 5. சிதம்பரம் ( )

3) 1. கம்மாரதேவ 2. சித்தராஜ 3. காலவேல 4. சேதியம் 5. வளவாமுனி ( )

4) 1. சோமாதேவி 2. ரத்னாவலி 3. திரிலோகசுந்தரி 4. கல்யானவதி 5. லீலாவதி ( )

5) 1. முதல்புலகத்தன் 2. பிளையமாறன் 3. பாகிய 4. பல்லூகன் 5. பணயமாறன் ( )

6) 1. செங்கடகல 2. கட்டுபுலுறுவர 3. கத்தேநுவர 4. சிரிவர்த்தனபுர 5. மந்தாரம்புர ( )

7) 1. யான்மற்சுயிகர் 2. பிலிப்யூஸ்போல்டேஸ் 3. ரிக்குளோப்வான்ஹீன்ஸ் 4. விலெம்வான் இம்ஹொா∴ப் 5. யான்சுறோயிடர் ( )

8) 1. கோல்புறூக் - கமரன் 2. குறூ – மக்கலம் 3. டொனமூர் 4. மொன்டேகு – சேமஸ்பாட் 5. மனிங் - டெவன்சியர் ( )

9) 1. சிங்கள மகாஜன சபை 2. சில்வத்து சங்கம் 3. இலங்கை தேசிய கழகம் 4. இலங்கை சீர்திருத்தக்கழகம் 5. இலங்கை தேசிய காங்கிரஸ் ( )

10) 1. D.S. சேனநாயக்க 2. ஒலிவர்குணதிஸக்க 3. டட்லி சேனநாயக்க 4. ஜோன் கொத்தலாவல 5. எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்க ( )

- **இல 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1. லம்பகர்ண வம்சம் - வசப மன்னன்
2. மோரிய வம்சம் - தாதுசேன மன்னன்
3. காலிங்க வம்சம் - முதலாம் விஜயபாகு
4. தம்பதெனி வம்சம் - மூன்றாம் விஜயபாகு
5. நாயக்க வம்சம் - ஸ்ரீவிஜயராஜசிங்கமன்னன் ( )

12) 1. வாகிரிகல - வீரமல்லன்
2. கோவிந்தமலை - புவனேகபாகு ஆதிபாத
3. யாப்பகூவ - சுபசெனிவி
4. மினிப்பே - சங்க செனிவி
5. தம்பதெனிய - விஜயபாகு ( )

13) 1. யொரிஸ்.:.போன் - ஸ்பில்பேர்ஜன் - முதலாம் விமலதர்ம சூரியன்
2. யோன்பையஸ் - கீர்த்திஸ்ரீ ராஜசிங்கன்
3. ஹீயூபொயிட் - இரண்டாம் ராஜசிங்கன்
4. ரொபேர்ட் அன்ரூஸ் - ராஜாதி ராஜசிங்கன்
5. மக்டோவல் - ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ( )

14) 1. 1815 - முடிக்குரிய நிலங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம்
2. 1856 - கோவில் நிலங்கள் கட்டளைச் சட்டம்
3. 1872 - தானிய வரிக் கட்டளைச் சட்டம்
4. 1897 - தரிசு நிலக் கட்டளைச் சட்டம்
5. 1935 - நில அபிவிருத்தி கட்டளைச் சட்டம் ( )

15) 1. பொன்னம்பலம் அருணாசலம் – இலங்கை தேசிய காங்கிரஸ்
2. என்.எம்.பெரேரா – இலங்கை சமசமாசக் கட்சி
3. டீ.பி. ஜெயதிலகா – சிங்கள மகா சபை
4. ஜீ.ஜீ. பொன்னம்பலம் – சிங்கள மகா சபை
5. ஏ.ஈ. குணசிங்க – தொழிற்கட்சி ( )

- **இல 16 – 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1. கதம்பநதி | A. மகாவலி கங்கை |
| 2. கோணநதி | B. மல்வத்து ஓயா |
| 3. கப்பரகந்த நதி | C. தெதறு ஓயா |
| 4. ஜஜ்ஜர நதி | D. மாணிக்க கங்கை |
| 5. மகாவாலுகா நதி | E. கலா ஓயா |

1. BEDCA 2. BDECA 3. BDCEA 4. BAEDC 5. BADEC ( )

17)

| X | Y |
|---|---|
| 1. சிறிமேகவண்ணன் | A. ஹோபிட்டிக்கம கல்வெட்டு |
| 2. நான்காம் உதயன் | B. தேவநகலப் பாறைக் கல்வெட்டு |
| 3. முதலாம் விஜயபாகு | C. கல்பொத்த கல்வெட்டு |
| 4. முதலாம் பராக்கிரமபாகு | D. பனாக்கடுவ செப்பேடு |
| 5. நிஸங்கமல்லன் | E. தோணிக்கல கல்வெட்டு |

1. DBACE 2. EDABC 3. BDECA 4. BADCE 5. EADBC ( )

18) X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | கோல்புறுக் அரசியலமைப்பு 1833 | A. | சர்வஜன வாக்குரிமை வழங்கியமை |
| 2. | குறூ – மக்கலம் அரசியலமைப்பு 1910 | B. | சட்டசபையின் உற்பத்தி |
| 3. | மனிங் அரசியலமைப்பு 1920 | C. | மந்திரிசபை முறை அறிமுகம் செய்யப்பட்டமை |
| 4. | டொனமூர் அரசியலமைப்பு 1931 | D. | மாகாண ரீதியில் பிரதிநிதிகள் தெரிவு |
| 5. | சோல்பரி அரசியல் யாப்பு 1947 | E. | கல்விகற்ற இலங்கையர் தெரிவு |

1. BADEC 2. BAEDC 3. BDCEA 4. BDECA 5. BEDAC ( )

19)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | தாழ்நாட்டு உற்பத்தியாளர் சங்கம் | A. | எஸ்.ஏ. விக்கிரமசிங்க |
| 2. | சிலாப சங்கம் | B. | விக்ரர் கொரயா |
| 3. | இலங்கை தேசிய காங்கிரஸ் | C. | சார்ஸ் டீ. சொய்சா |
| 4. | இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | D. | பொன். அருணாசலம் |
| 5. | அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | E. | ஜீ.ஜீ. பொன்னம்பலம் |

1. BEACD 2. CBDAE 3. CDAEB 4. DEACB 5. EDABC ( )

20)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | ஹென்றி வோல்ட் | A. | கந்தளாய் குளம் |
| 2. | ஹெர்குயூலிஸ் ரொபின்சன் | B. | நாச்சதுவ வாவி |
| 3. | வில்லியம்கிரகரி | C. | கலாவாவி |
| 4. | ஆத்தர்ஹோடன் | D. | இறக்காமம் வாவி |
| 5. | வெஸ்ட்ரிச்வே | E. | திஸ்ஸமகாராம வாவி |

1. EDABC 2. DEACB 3. CBDAE 4. CDAEB 5. BEADC ( )

- **இல 21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) ரஜரட்ட நாகரிகத்தின் ஓவியங்கள்
1. சீகிரிய ஓவியங்கள் கி.பி. 5ம் நூற்றாண்டிற்கு உரியவை.
2. திவங்க சிலைமனை ஓவியங்கள் பெலன்னறுவை காலத்தவை.
3. தூபியின் தாதுகர்ப சுவர்களில் ஓவியம் வரையவது பழைய கால மரபாகும்.
4. ஹிந்தகல ஓவியங்கள் பொலன்னறுவை காலத்தவை
5. திம்புலாகலை ஓவியங்கள் சக ஜாதத்திதை வெளிப்படுபவை. ( )

22) நிசங்க மல்லன் எதிர்நோக்கிய சவால்கள்
1. பாண்டியர்கள் அரச உரிமை கோரியமை
2. கொவி குலத்தவர்களின் எதிர்ப்பு
3. பராக்கிரமபாகுவின் மங்கா புகழ்
4. நிஸங்கமல்லன் கலிங்களாக காணப்பட்டமை
5. சோழர் படையெடுப்பு. ( )

23) சீதாவாக்கை இராச்சியத்தின் வளர்ச்சியுள்ள பிரதான கட்டங்கள்.
1. விஜயபாகு கொலை
2. இறைகமம் இணைக்கப்படுதல்
3. 1ம் இராஜசிங்கன் கண்டியை கைப்பற்றியமை
4. முல்லேரிய போரில் 1ம் ராஜசிங்கன் வென்றமை
5. 1604 இல் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியமை. ( )

24) நாயக்கர் வம்சம்
   1. ஸ்ரீவிஜய ராஜசிங்கன் முதல் அரசனாவான்.
   2. நாயக்க அரசர்கள் தென்னிந்த பெண்களை திருமணம் செய்தார்கள்.
   3. பௌத்த மறுமலர்ச்சியில் கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் முக்கியமானவர்.
   4. நரேந்திர சிங்கன் இறுதி நாயக்க மன்னன்
   5. பிரித்தானியர் வரும் காலத்தில் ராஜாதிராஜசிங்கன் ஆட்சி புரிந்தார். ( )

25) பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பௌத்த மறுமலர்ச்சி
   1. பௌத்த பிரம்ம ஞானசங்கம் உருவாக்கப்பட்டமை
   2. உபசம்மதா சடங்கு ஆரம்பிக்கப்பட்டமை
   3. பௌத்த பிரிவேனா கல்வி வளர்ச்சி
   4. பௌத்த கொடி உருவாக்கம்
   5. வெசாக் விடுமுறை அறிமுகம் ( )

- **இல 26 – 30 வரையுள்ள ஒவ்வொன்றிற்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளும் சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.**

  (A) யும் (B) மட்டும் சரியாயின் 1 எனவும்

  (B) யும் (C) மட்டும் சரியாயின் 2 எனவும்

  (C) யும் (D) மட்டும் சரியாயின் 3 எனவும்

  (A) யும் (C) மட்டும் சரியாயின் 4 எனவும்

  ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| **அறிவுறுத்தல்களின் சுருக்கம்** | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

26) யாழ்ப்பாண இராச்சியத்தைப் பொறுத்தவரையில் மேல்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை?
   A) யாழ்ப்பாண வைபவமாலை, செகராசசேகர மாலை என்பன யாழ்ப்பாண வரலாற்றை அறிய உதவும் பிரதான மூலகங்களாகும்.
   B) விஜய கூழங்கை சிங்கை ஆரியன் யாழ்ப்பாண இராச்சியத்தை உருவாக்கினான்.
   C) சோழ மண்டல பிரதிநிதிகள் யாப்பாணத்தை ஆட்சி புரிந்தனர்.
   D) 1617 பரராஜசேகர அரசனை கொன்று போத்துக்கேயர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றினர்.
   ( )

27) கோட்டை இராச்சியத்திலே போர்த்துக்கேயர் ஆதிக்கம் ஏற்படுவதற்கு ஏதுவாக இருந்த காரணங்கள் யாவை?
   A) போர்த்துக்கேயரின் கடற்படை வலிமை.
   B) போர்த்துக்கேயருக்கு கோட்டை மன்னர் வழங்கிய ஆதரவு.
   C) ஏழாம் புவனேகபாகு கத்தோலிக்கனாகியமை.
   D) கோட்டை அரசுக்கு எதிராக கண்டி இராணுவம் உதவியமை. ( )

28) டொனமூர் ஆணைக்குழுவின் பிரதானமான சிபாரிசுகள் யாவை

A) இலவசக் கல்வி அறிமுகம்

B) நிர்வாக குழுமுறை அறிமுகம்.

C) இனவாரி பிரதிநிதித்துவம் தொடர்ந்தமை.

D) பொது நிர்வாக சேவை ஆணைக்குழு நிறுவப்பட்டமை. ( )

29) 1972ம் ஆண்டு அரசியலமைப்பு தொடர்பாக மேல்வருவனவற்றுள் எது / எவை சரியானவை?

A) பெயரளவு ஜனாதிபதி காணப்படல்

B) விகிதாசார பிரதிநிதித்துவம் அறிமுகம்.

C) ஓர் அவை பாராளுமன்றம்.

D) மக்கள் இறைமை ஏற்றுக்கொள்ளப்பட்டமை. ( )

30) சோல்பரி அரசியல் திட்டம் தொடர்பான மேல்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானவை

A) தொடர்ந்து நிர்வாக குழு செயற்பட்டமை.

B) முதலாவது பாராளுமன்ற தேர்தல் 1948இல் இடம்பெற்றமை.

C) இரு சபை பாராளுமன்றம் உருவாக்கப்பட்டமை.

D) இலங்கை சுதந்திரமடைந்தமை. ( )

- **இல 31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**

31) சுமார் 125000 வருடங்கள் பழமையான கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட தென்மாகாணப்பகுதி.

1. பதிராஜவெல 2. பூந்தல 3. மனிஹால் கல்கந்த
4. பாகியன்கல 5. குருவிட்ட ( )

32) மதர மஞ்சக எனப்படும் வரி விதிக்கப்பட்ட துறை?

1. விவசாயம் 2. மீன்பிடி 3. வர்த்தகம்
4. கைத்தொழில் 5. மந்தை வளர்ப்பு ( )

33) மீண்டும் மோரிய வம்சத்திற்கு ஆட்சியுரிமையை பெற்றுக் கொடுத்த அரசன்.

1. வசபன் 2. வலகம்பா 3. தாதுசேனன் 4. காசியப்பன் 5. மகாசேனன்
( )

34) இலங்கையின் முதல் ஆளுநர் நாயகமாக செயற்பட்டவர்.

1. சோல்பரி பிரபு 2 ஒலிவர் குணதிலக 3. வில்லியம் கோமல்லாவ
4. ஹென்றிமங்மேசன்மூர் 5. J.R. ஜெயவர்த்தன ( )

35) இலங்கையை குடியரசாக வெளிப்படுத்திய யாப்புமுறை சீர்திருத்தம்.

1. கோல்புறுக் 2 டொனமூர் 3. சோல்பரி
4. 1972 குடியரசு யாப்பு 5. மனிங் டெவன்சியர் ( )

- **இல 36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

| முதலாம் கூற்று | | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | இலங்கை வரலாற்றை தெளிவாக கூறும் நூல் தீபவம்சம் ஆகும். | சூளவம்சம் தீப வம்சத்தின் இரண்டாம் பகுதியாகும். ( ) |
| 37) | யோதவாவியை மகாசேனன் கட்டினான். | 3ம் விஜயபாகு தர்மதெனியவை தலைநகராக்கினான். ( ) |
| 38) | கண்டியுள் 21 நிர்வாகப் பிரிவுகள் காணப்பட்டது. | அவ் நிர்வாக பிரிவுகள் 12. திசாவைகளையும் களாகவும் 9 ரட்டே பகுதிகளாகவும் காணப் பட்டன. ( ) |
| 39) | தேசவழமை என்பது தமிழர்களின் பாரம்பரிய சட்டங்களாகும் | தேசவழமை ஒல்லாந்தரால் நூல் வடிவில் தொடுக்கப்பட்டது ( ) |
| 40) | திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்தில் தனியர் பாடசாலைகள் அரச பாடசாலைகளாக்கப்பட்டன. | 1964 சிறிமா – சாஸ்திரி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. ( ) |

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**ஆறாம் தவணைப் பரீட்சை - 2021**
**Conducted by Field Work Centre, Thondaimanaru.**
**6th Term Examination - 2021**

FWC

**இலங்கை வரலாறு II**
**Sri Lankan History II**

**Gr -13 (2021)**

**25** **T** **II**

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).**
- **முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் வழங்கப்படும்.**

## பகுதி A

01) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் புறவுருவப் படத்தில் மேலே தரப்பட்ட இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| 1. யாழ்ப்பாண நகரம் | 2. சேனாநாயக்க சமுத்திரம் | 3. கதிர்காமம் |
| 4. வடமத்திய மாகாணம் | 5. மகாதித்த | 6. தெதுறு ஓயா |
| 7. மாத்தளை | 8. தெவிறுவர | 9. வளவை கங்கை |
| 10. மட்டக்களப்பு | 11. கொட்டியாரம் | 12. சீதாவாக்கை |

(12x1=12 புள்ளிகள்)

## பகுதி B

02) மகாசேனன் ஆட்சிக் காலம் முடியும்வரை இலங்கையின் வரலாற்றை கற்பதற்குரிய மூலாதாரம் என்ற வகையில் மகாவம்சத்தின் முக்கியத்துவத்தை கீழ்வரும் விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

1) மகாவம்ச ஆசிரியரும் அது எழுதப்பட்ட காலமும்
2) மகாவம்ச விவரங்களை சாசனங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல்.
3) ஒருவரலாற்று மூலதாரம் என்ற வகையில் மகாவம்சம் கொண்டுள்ள குறைபாடுகள்.

(16 புள்ளிகள்)

03) 1) வட்டகாமினி அபயஅரசன் எதிரிநோக்கிய சவால்கள் யாவை? (07 புள்ளிகள்)

2) அந்தச் சவால்களுக்கு முகங்கொடுத்து எவ்வாறு அவன் அவற்றியடைந்தான் என்பதை விளக்குக.

(09 புள்ளிகள்)

04) முதலாம் விஜயபாகுவும் முதலாம் பராக்கிரமபாகுவும் இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான மன்னர்களாவார்.

1) சிறுவயதில் விஜயபாகுவுக்கு உதவிய மலையக பிரதானியின் பெயர் என்ன? (1 புள்ளி)
2) 1ம் பராக்கிரமபாகுவின் பெற்றோர்களின் பெயரைத் தருக. (2 புள்ளிகள்)
3) 1ம் விஜயபாகுவும் 1ம் பராக்கிரமபாகுவும் எதிர்நோக்கிய சவால்களை சுருக்கமாகக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)
4) இருவர்களும் எதிர்நோக்கிய சவால்களை முறியடித்தமை தொடர்பாக வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றினை ஆராய்க. (7 புள்ளிகள்)

05) கீழ்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு தருக.

1) சீகிரியா
2) ஆரிய சக்கரவர்த்தி வம்சம்
3) நிஸங்க மன்னன்
4) வசபன்

## பகுதி C

06) இலங்கையின் கரையோர மாகாணங்களில் போர்த்துக்கேயரின் அதிகாரம் வீழ்ச்சியுறுவதற்கு ஏதுவான காரணிகளை விமர்சன ரீதியாக ஆராய்க. (16 புள்ளிகள்)

07) அரசியலமைப்ப, நிர்வாகம், நீதிபரிபாலனம் என்பன தொடர்பாகக் கோல்புறுக் கமரன் ஆணைக்குழுவின் ஆலோசனைகளை பரிசீலனை செய்க.

(16 புள்ளிகள்)

08) A பகுதிக்கு அல்லது (B) பகுதிக்கு விடை எழுதுக.

(A) கீழ்வரும் தலைப்புகள் தொடர்பாக சோல்பரி அரசியலமைப்பின் பிரதான அம்சங்களைப் பரிசீலனை செய்க. (16 புள்ளிகள்)

1) தேசாதிபதி
2) பிரதம மந்திரியும் மந்திரிசபையும்
3) இரு சபை பாராளுமன்றம் (16 புள்ளிகள்)

(B) 1978 வரை இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக.

(16 புள்ளிகள்)

09) கீழ்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்புகள் தருக.

1) 6ம் பராக்கிரமபாகு
2) வலிவிற்ற ஸ்ரீ சரணங்கரதேரர்
3) 1815 கண்டி ஒப்பந்தம்
4) பௌத்த சமய மறுமலர்ச்சி

(16 புள்ளிகள்)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021

## Conducted by Field Work Centre, Thondaimanaru.

## 6th Term Examination - 2021

இலங்கை வரலாறு

